முத்தமிழ் மன்றமாம் பூஞ்சோலை
சத்தான வாசமாய் நம் நண்பர்
வித்தான அறிவுத் தென்றல் வீச
பித்தாக மா(ற்)றும் கவிதை நயங் கொண்டு
முத்தாகவே வளர்ப்பர் முத்தமிழ்.

வயதால் வரும் நட்பு வளைந்து விடும், செய்கின்ற
செயலால் வரும் நட்பு சிதைந்து விடும், கள்ளர்களின்
கயவால் வரும் நட்பு கலைந்து விடும், மூடர்களின்
தயவால் வரும் நட்பு தளர்ந்து விடும், நடுங்கும்
பயத்தால் வரும் நட்பு பணிந்து விடும், பேரன்பு
மயத்தால் வரும் நட்பு வாழும் நூறு வயது.

கண்ணிருந்தும் குருடராயிருந்துவிட்டாய்
பண்ணெடுத்துப் பாடலாய் சொல்ல வந்தேன்
விண்முட்ட அதிசயங்கள் நிறை அண்டமிதில்
தண்ணீர் போல் பாத்திரத்தின் வடிவெடுக்கவும்
மண் மீதே திறனதனை விதைக்கவும்
எண்ணாமலே பொழுதைப் போக்கும்
புண்ணான உனக்கேன் கண்?

ஆடியிலே தள்ளுபடியாம்
பாடிக் கூப்பிடுவார் தொலைக்காட்சியிலே
தேடிப் போய் வாங்குகின்றார் கடைகளிலே
சோடியாகப் போகின்றார் ஆணும் பெண்ணும்
வாடித்தான் போகிறார் ஆண்கள் மட்டும்
மாடி மேலே மாடி இனி கட்டிடுவார் வியாபாரி
நாடி நாம் போகாவிடில் ஆடிப்போவார் ஆடி!

கல் கூட காத்திருந்து சிற்பமாகுது
சொல் கூட விழித்திருந்து கவிதையாகுது
வில் கூட நாணேற்றி அம்பைப் பாய்ச்சுது
நல்லாசான் சரியாக அமைந்து விட்டால்
செல்லாக் காசு கூட செல்லுபடியாம்
புல்லாகவே நம்மை மதிக்காமலிருக்க

பல்லில்லாக் கிழவனானாலும் மானுடனே! கல்.

நின்றனவெல்லாம் நின்றனவல்ல
சென்றனவெல்லாம் சென்றனவல்ல
இறைவன் துணை மட்டும் இருந்தால்
நிற்பவையும் நடக்கும்.

கொண்டே ஆர் எங்கு போனாலும்
விண்டே செல்வம் எங்கோ சென்றாலும்
கண்ணுக்கு இமைதான் காவல் போலே
விண்ணுக்கும் கூட வரும் அறிவுச் செல்வம்.

ஆக்கமும் ஊக்கமும் மனத்தே கொண்டு
தேக்கமே இன்றி நீ ரோடை தன்னைப்
போக்கிடமாகவே கடல் சேர்ப்பது போலே
நீக்கமற இங்கே நிறைந்திருக்கும் கடவுளே
காக்கும் வண்ணம் சேர்வோம் நாமே.

வழியென்று பலவே உண்டு ஊர்களுக்கு
பழியென்று வந்திடும் ஓர் வழியே சிறப்பென்றால்
கழிக்காமல் ஆன்றோர் செல்வழியே சென்று
சுழியான இறைக் கடலைச் சேர்ந்திடுவோம் யாம்.

செய்திடும் வினையாலே ஊழ்வந்து சேர்ந்திடுமே
பெய்திடும் அருள்மழையால் கரைக்கலாகும்
எய்திடும் தத்துவ ஞான விளக்கமதால்
ஓய்வதுவே எடுக்கட்டும் ஐம்பூதங்களும்.

செய்யும் செயலெதுவும் யார் செய்வது?
எய்தவன் இருக்க அம்பை நோவாருண்டோ?
பொய்யொன்றும் சொல்லவில்லை காணீர்!
மெய்யதுவே செயலனைத்தும் அவன் பொறுப்பு!

இழப்பதற்கு இனியென்ன இருக்கு இங்கே
ஈழப் புலிகளையே சிங்களவர் தாக்குகையில்

வாழத் தான் தமிழனுக்கு கொடுப்பில்லையோ
வேழம் போல் தோட்டத்தை அழிக்கவேணும்
தாழம்பூவாய் மணமங்கே வீச வேணும்.

வரையிலா அண்டமது பூமிதாங்கும்
கரையிலே சிப்பியது முத்தைத் தாங்கும்
தரையிலே நம்மைத் தாங்க தாயிருப்பாள்
விரைவினிலே வீடுதேடி இன்பம் காண்போம்.

நன்றிகள் இங்கே சொல்வதற்கு வழியில்லை
மென்றிடவே வீட்டிற் கப்போதே வந்துவிட்டேன்
வென்றிடவே உம்மை முடியாதென்று
தோன்றிடவே நீ ரே ஜெயித்தீ ர் என்பேன்.

வருந்தி யே தவம்பல செயினும்
பொருந்தவே நி னைத்தது கி ட்டுமோ?
விருந்தாக நானைப் படைத்தால்
அருந்தவே அனைத்தும் கி ட்டும்.

அன்றோ நடந்தது யாராலே
இன்றே நடப்பதும் யாராலே
என்றோ நடக்குமோ யாராலோ
நன்றே நடக்குமிப் பூமியிலே!

விடவே விடாது நன்மை செய்தால்
கூடவே வருமோ துன்பமும் இன்னலும்
மடமே நன்மை தீ மை வெளியிலேது?
தேடவே வேண்டும் எல்லாம் உள்ளே!

தீ மையைச் சுட்டெறிப்போம் எந்தச்
சீ மைக்குச் சென்றாலும் தமிழ்வளர்ப்போம்
ஆமைக்கு ஓடு போல் நமக்கு மொழி; கண்ணுக்கு
இமை போலே காப்போமே அதை!

வேடிக்கை தானோ நீ கேட்பது?

வாடிக்கை தானே அவன் செய்வது!
மாடியோ கூரையோ கிடைப்பது சுகம்
சோடியும் கூடக் குறிக்குமே அதை!

சிறந்திடுமே வாழ்வென்று சொன்னார்
பிறந்திடுமே நற்காலமென்றும் சொன்னார்
திறந்திடுமே பொற்கதவென்றும் சொன்னார்
இறந்திட்ட பின்னரே கிடைத்தென்ன செய்ய?

வாழ்வு வான்முட்டி உயர்வுறுமோ
தாழ்வே தான் தாம்வந்து சேர்ந்திடுமோ
பாழ்பட்ட நெஞ்சு பலவாறு துடித்திடுதே
யாழ்மீட்டி இனிதுற இருப்பதுவே போதுமே!

வளம் பெறலாம் என்றும் வாழ்வில்
களம் இறங்கி வென்றிடுவோம் நாளும்
குளம்போல் என்றும் அன்பைத் தேக்கி
சோளம்போல் அழகாய் பணிந்திருந்தால்.

நன்மை யாவர்க்கும் செய்திட நன்மை
இன்மையின்றியே இனிது கிடைக்கும்
மென்மையாகவே யாவரும் பழகினால்
வன்மை மாறும் வளமை பெருகும்.

விட்டாயோ முயற்சி செய்வதை?
விட்டாலோ இகழ்ச்சி ஆகுமே,
பட்டாலே புத்தி வரும்,
இட்டலே மேன்மை தரும்!

இறைஞ்சுவது உயிர்கள் கடன்
குறைஇல்லா சமநிலை தரவே!
நிறைமட்டும் உள்ள இறையை
பறைவது சான்றோர் வாக்கு.

வேண்டும் வேண்டும் என்றே பதறும் மானிடா

யாண்டும் நன்மை வரின் தீ மையும் வருமன்றோ?
தொண்டு தோழமை பெருக்கினால் மலர்ச்
செண்டு போலவே யாகும் வாழ்க்கை!

விரும்ப வில்லையானாலும் நடப்பது நடக்கும்
இரும்பது போல் மனம் வைக்காமல் நாணல்
துரும்பாகவே வளைந்து விட்டால்
கரும்பாகவே இனிக்கும் அனைத்தும்!

வாழும் முறையது சொல்வேன் கேளீர்
பாழும் பகையதை அறுப்போம் கேளிர்
தாழும் வகையேதும் இல்லா வண்ணம்
எழும் சமத்துவக் கொடியை ஏந்தி!

விளையாட்டு வினையாகும் சொன்னார்களன்றே
களைபறித்துப் போட்டால் தானே இங்கே பயிர்
விளையும் என்றே தெரிந்திருந்தும் வீணே பலாச்
சுளையருந்தி விளையாடுவோர் உண்டோ காண்!

மனிதா என்னதான் வேண்டுமுனக்கு?
இனிதான வாழ்வதையே தந்தபின்னும்
தனித்துவப் பேறு பெற்றும் பொறாமைக்
கனியதனைச் சுற்றுகிறாயே ஈயாக.

பிறப்பாயே நீ யேழேழு ஜென்மம்
துறப்பாயே செய்த வினையாவும்
கறப்பாயே ஞானப் பாலதனையே
சிறப்பாயே அதைநாளும் உண்டு!

சேர்ப்பாய் செல்வம் தனை அதிகம்
வார்க்க வேண்டாம் தங்மாக அதை
பார்க்கலாகுமோ இறந்தபின் ஆதலால்
ஈர்ப்பாய் வறியோர்க்கதை ஈந்து.

உணரட்டும் நீ தான் அவதரித்த கலியென்று

திணறட்டும் தீமையெல்லாம் உனைக் கண்டு
கிணற்றுத் தவளையாய் இராமல் நீயும்
மணம் வீசும் தாமரையாய் மாறும் போது.

நீயும் நானுமாய் உலகை ரசிக்கலாம்
வாயும் வயிறுமாய் ஆகிப் போகலாம்
தேயும் நிலவையும் கண்டு ரசிக்கலாம்
காயும் கனியும் கனிந்து உருகலாம்!

மானுடா வீணே உண்டு கழிப்பாயோ
பானுறங்கினால் நீயுறங்கும் காலமன்றோ
தேனுமாகும் வாழ்க்கை காலத்தே
ஊனுறக்கம் கொண்டால் ஞாலத்தே!

ஞாலத் தேவன் ஒருவனே தெரிந்தும்
காலத்தால் மாறாதனென் றறிந்தும்
கோலத்தை மட்டுமே மாற்றியவன்
சீலத்தை யழிக்கின்றார் மதத்தாலே.

நன்மை தீமையிரண்டுண்டா வாழ்க்கையில்?
தன்மையாய் தேடிப்பார்த்தால் எல்லாந்தெரியும்
வன்மையான வாழ்க்கையே தீமை அன்பின்
மென்மையான வாழ்வதுவே நன்மை!

இப்புவியிலே வாழும் வாழ்க்கை எது?
செப்புவேன் உண்மையொன்றே கேளீர்
தப்பாமல் அறம் செய்வோம் வாரீர்
ஒப்பிலா வாழ்க்கை அதுவே பாரீர்.

நற்பணி செய்வோம் நாளும் என்று
சொற்பணி செய்தே கிடப்பதா பெருமை?
கற்போம் சான்றோர் வார்த்தை அதன்படி
நிற்போம் நாளும் கடமை செய்தே!

நிறைகளை மட்டும் பார்க்கும் தோழி

குறைகுடம் கூத்தாடும் தெரியுமா?
இறைமட்டும் வணங்கிப் பிறவியெனும்
சிறைநீக்க சமநிலை காண்போம் நாம்.

என்ன நினைத்தாலும் நினைத்துக் கொள்
கன்னத்தோடு கன்னம் இழைத்துக் கொள்
இன்பத்தின் எல்லையைத் தொட்டுக் கொள்
மென்மையான இதயத்தைக் கொடுத்து விட்டு!

நிலைத்தானே மக்கள் மனதில் என்றும்
விலைபோகா தலைவன் தன் வாழ்வில்
மலைபோல காரியத்தைத் தன் செயலால்
இலைபோல எளிதாய் ஏந்தி நிற்பான்!

போய்விடு என்றா எளிதில் சொல்லிவிட்டாய்?
வாய்விட்டுக் கதறினாலும் போனது வருமோ?
சேய்தன்னைத் தாயென்றும் ஒதுக்குவாளோ?
காய்தன்னை மரம் விட்டால் கனியேது?

என்றுமே நிற்கும் தன்மை பகர்வேன்
அன்றே சான்றோர் சொல்லி வைத்தார்
மென்று விழுங்கும் மரணம் வந்தாலும்
வென்றே நிற்கும் நன்மைசெய் மனமே!

இருமனம் கொண்ட பாழும் மனிதனே
ஒருமனம் கொண்டு வாழும் வழிபார்
மருவிலா வாழ்வது வேண்டின் நீயும்
கருவிலும் யார்க்கும் நினையாய் தீங்கே.

நீயே சொல்இது நியாயம் தானா?
ஈயேன் என்கிறாயே எது தானுனது?
வாயே பேசாது செய்யும் தர்மத்தால்
காயே கனியும் பூமியும் சுழலும்.

உள்ளங்களே நன்மை மட்டும் சிந்தியுங்கள்

பள்ளமில்லாப் பாதை யுண்டோ உலகில்
கள்ளமில்லா உள்ளம் நமக்கி ருந்தாலே
அள்ளக் குறையா இன்பம் தோன்றும்.

செய்ய முடியாதது உண்டோ உலகில்
பெய்ய முடியா மழையும் பெய்யும்
கொய்ய முடியா கனியையும் கொய்யும்
மெய்யதுவே மனமிருந்தால் மார்க்க முண்டு!

ஏனோ பெண்கள் ஆணை எதிர்த்தனர்?
தேனோ அவர்கள் உள்ளம்? உள்ளேவைத்
தானோ இறைவன் கள்ளம்? பொன்வைப்
பானோ இரும்புக்கு வெளியே பூட்டாய்?

வலிகள் இங்கே ஆயிரம் உண்டே
கலிகாலம் தான் ஆகிப் போச்சுதே
எலிகள் பூனையை மிதித்துப் போகுதே
பலிகொடுக்க மக்கள் தயங்க வில்லையே!

மனமே முருகனின் மயில்வாகனம்
தினமே நினைத்திடு அவனை முழுதும்
கனமே இல்லா வாழ்வது தருவான்
சினந்தான் சூரனை நம்மை வாழ்விக்க.

கண்டிடுவோம் நாளும் இன்பம் வாழ்வில்
உண்டி கொடுத்திடுவோம் ஏழைக் கிங்கே
வண்டி வண்டியாய் செல்வம் சேர்த்தாலும்
கொண்டிங்கு போகலாமோ இறுதி வழியிலே?

பலர் வந்து இங்கே போனார்
சிலர் மட்டும் மனதில் நின்றார்
இலருக்கு உதவி செய்வர் காலை
மலர் கொண்டு வாழ்த்துவனே.

செய்கின்றது மனமே அனைத்து செயலும்

எய்கின்றது கடுஞ்சொல்லை அதுவே நாளும்
உய்கின்ற வழியதுவே சொல்வேன் கேளீர்
சேய்தன்னில் தாய் கொள்ளும் அன்பேயாம்.

இல்லையாம் யாவர்க்கும் கல்வி இங்கே
தொல்லையாம் பலர் இங்கே வருந்துவார்
சொல்லவா இதற்கும் ஒரு தீர்வை?
கல்வியினி கருவிலே கற்கும் வண்ணம்
வெல்லவே பெண்கல்வி படைத் திடுவோம்!

எம்மாலே நடப்பது என்றும் உண்டோ?
உம்மாலே நடப்பதும் எதுவும் இல்லை!
நம்மாலே நடக்கு மிங்கே அனைத்தும்
செம்மை இங்கே கூட்டுறவே நாட்டுயர்வு!

உயரும் கட்டிடம் செல்வம் எல்லாம்
அயரும் ஏழை உழைப்பைக் காட்டும்
இயலா மனித ரானாலும் அன்பிருந்தால்
துயரிலா வாழ்வதுவே வாழ லாமே.

ஏது போரை வெல்லவழி இங்கே?
காது கொஞ்சம் கொடுங்க இங்கே
மெது வாகவே சொல்லப் போகிறேன்
சாது வாகவே எதையும் அணுகுவோம்.

வரைமுறை யில்லா வன்முறை ஆடுது
கரைதனைத் தாண்டியே ஆடும் தாவுது
விரைவில் இதை நாமும் வெல்லணும்
தரையில் அன்பை பரப்புவோம் நாளும்.

சாசனம் ஒன்றை காந்தி சொன்னார்
ஆசனம் தன்னில் அமர்ந்து கேளுங்கள்
வாசனை அஹிம்சை மலர் கொண்டு
தேசத்தின் ஒற்றுமை தன்னைக் காப்போம்.

அன்றோ முடிந்தது நல்லோர் காலம்
இன்றே நடப்பது ராட்சசர் காலம்
என்றே வருமோ ரட்சகர் காலம்
நன்றே தோன்றும் இளைஞர் காலம்.

ஓடுகின்றதே வானில் மேகம் மழையின்றி
தேடுகின்றதே அங்கே மரமிருக்கும் இடத்தை
வாடுகின்றதே மனிதன் அழித்த காடுகளாலே
சாடுகின்றதே மழையைக் கடலில் பொழிந்து!

திருமணம் செய்யும் அருமை இளைஞரே
கருவாடு போலே காலம் கருக்கினும்
திருவோடு ஏந்தி தெருவோடு போயினும்
இருமணம் இணைந்தே வாழ்வது வாழ்க்கை!

இடுவோம் இல்லார்க்கு நம்மிடம் இருப்பதை
தொடுவோம் அவர் நெஞ்சை அன்பாலே
விடுவோம் சுயநலம் என்னும் பேயை
நடுவோம் அற விதையைநம் மனத்தில்!

இருந்தால் மட்டும் இங்கே போதுமா?
விருந்தாகவே தரும் எண்ணம் வேண்டும்
மருந்தாகவே இருந்தால் கூட அதையும்
அருந்தவே பகிர்ந்திடும் மனமே வேண்டும்.

படைத்திடு நான் என்னும் ஆணவத்தை
கிடைத்திடும் கடைத் தேறும் வழியிங்கே
இடையினில் நாம் வாழும் நாளிலன்பை
மடைதிற வெள்ளமாக ஓட விடுவோம்.

நற்பயன்களே நாளும் கிட்டட்டும்
கற்பிக்கவே கல்வி இங்குண்டு
விற்பன்னரே வந்து தாருங்கள்
ஏற்புடைய தாய் மொழிதன்னில்.

அன்பு ஒன்றே வேண்டும் என்பேன்
என்பும் உருகும் பண்பு கேட்டேன்
மேன்மையாம் சகிப்புத் தன்மையாலே
இன்பம் மட்டும் பெருகும் வாழ்வில்.

உணர்த்து வோமே யாவர்க்கும் உண்மை
கிணற்றுத் தவளை யாகவே இல்லாமல்
மணம்வீசும் சாதி மல்லிகை போலே
குணம் கொண்டிங்கே அன்பைப் பரப்ப.

போனது போகட்டும் என்றே தள்ளிவிடு
ஆனது ஆகட்டும் என்றே எண்ணியிரு
ஊனம் என்பது மனதினில் வந்திடாமல்
கானம் பாடி மகிழ்ந்து களித்திரு.

மகிழ்ச்சி வாழ்வில் நிலைத்திடவே
சகிப்புத் தன்மை வளர்த்திடுவோம்
மகிமை புரியாமல் வம்பிழுத்தால்
தகிக்கும் சூரியனாய் மாறிடலாம்.

மடியுமட்டும் வாழ்வோம் பூமியில்
விடியுமட்டும் காத்திருப்போம் ஆனால்
ஒடியுமட்டும் பொறுக்க மாட்டோம்
தேடியும் கொள்வோம் வெற்றி!

கொள்ளாதீர் தலைக்கனம் என்றும்
எள்ளாதீர் எளியோரைக் கண்டு
அள்ளாதீர் மற்றவர் பொருளை
தள்ளாதீர் வருமின்பம் தன்னை!

பிரிவுமுண் டென்றாலே உறவும்வரும்
கரியமேகத்தின் கனமே மழையாகும்
சொரிவிருக்கும் உணவே நலமாகும்
விரிந்து வரும் மலரே அழகாகும்!

ஒழுக்கமே என்றும் உயர்வு தரும்
அழுக்கை நீ க்கும் தெளிவு தரும்
இழுக்கை என்றும் நீ க்கி விடும்
பழுக்கும் கனியை நமக்கு தரும்!

மறைந்ததே சூரியன் மேற்கில்
உறைந்ததே ஒளியும் இருளில்
அறைந்ததே இருளின் கருமை
நி றைந்ததே மனதில் குளுமை

அவ்வாறே ஆகட்டும் என்பான் இறைவன்
செவ்வாயில் நாமம் செப்பிப் பலனில்லை
எவ்விப் பிடிக்க இறைவன் எங்கோயில்லை
கவ்விப் பிடிப்போம் அன்பின் வழியில்!

அறியவில்லை உந்தன் குழந்தை மனம்
எறியவில்லை உந்தன் குளத்தில் கல்லை
மறிக்காமல் மனங்கள் சங்கமிக்க வைப்போம்
நெறியாக காதல் செடியை வளர்ப்போம்.

எந்நாளும் தமிழ்த்தாய் நன்றாய் முகமலர
அந்நாளில் சங்கப்புலவர் அரிதாய் வளர்த்ததையே
இந்நாளில் இணையமதில் அழகாய் செய்தி டுவோம்
பந்நாட்டு மாந்தரும் பாங்காய் வியந்தி டவே.

உண்டு வளர்
தண்டு மலர்
கண்டு சிலர்
விண்டு இலர்.

தி யாகத்தோடு காப்பாள் அன்னை சேயை
நி யாயமாய் அவளைத் தான் தாங்காமல்
நயாபைசா சுத்தமாகக் கணக்குத் தீ ர்த்து
வியாபாரமாய் முதி யோர் இல்லம் சேர்ப்பான்.

வீழ்ந்து போய்விடுமோ நீ தி?
தாழ்ந்து அநீ தி கண்டு சோராமல்
பாழ்கி ணறாம் மனித மனங்களிலே
ஆழ்ந்து அறிவதனை எடுத்திட்டால்?

இருக்கும் வரை எதற்குமே மதிப்பில்லை
விரும்பியது கி டைத் தாலும் அப்படியே
கரும்பின் சுவையெங்கே அடியில் தான்
அரும்பும் தி ருப்தி யது அடிமனத்தி ல் தான்.

தானே வரும் செல்வமும் சேரும்
வானே மெச்சும்படி மேவி வளரும்
தேனே சொறியும் இன்பமும் பெருகும்
மானே நீ யும் என்னுடன் இருந்தால்!

போற்றும் உன்னை உலகம் அதுவே
தூற்றும் கொஞ்சம் சுயநலம் மிகுந்தால்
ஏற்றும் அன்பின் நெறிப்படி வாழ்தலே
ஆற்றும் நன்மை கோடியென்று உணர்.

வாழலாம் என்றே மீ னும் நி னைக்கும்
ஆழக் கடலும் வாஞ்சையாய் வளர்க்கும்
தாழப் போட்ட வலையும் அறியுமோதான்
எழப் போகையில் மீ னைக் கொல்வது?

பின்பற்ற வேண்டும் என்றே நி னைத்தேன்
இன்புற்று வாழவே நல்லோர் மொழிகளை
துன்பம் மட்டுமே அதனால் வரக்கண்டேன்
அன்பும் நி ம்மதியும் அதனுடனே கண்டேன்!

தீ ண்டாமலே காதல் வளருமா கேட்டாயே
வேண்டாமலே இறை வருகி றான் தாயாய்
சீ ண்டாமலே மேகம் பொழியுதே மழை
தூண்டாமலே வளருமே ஜாதி ச் சண்டையும்.

பாதத்திற்கே அழகு நடை
வாதத்திற்கே அழகு விடை
மாதத்திற்கே அழகு தை!
நாதத்திற்கே அழகு தாளம்
சாதத்திற்கே அழகு உப்பு!

நட்பாக இருந்தது மரமும் மழையும்
தட்பமும் வெப்பமும் சீராய் இருந்தது
கட்டுப்பாடின்றி மனிதன் மரம் சாய்க்க
சுட்டும் சுடராய் சூரியனும் ஆனதென்ன?

நானென்று ஆடியவர் போவார் மண்ணில்
ஊனென்று வீழுமோ பூமியின் மேலே?
தானென்று இராமல் அன்பால் வாழ்ந்தால்
வானென்று வாழ்வீர் மக்கள் மனதில்!

ஆகட்டும் என்றாய் ஆகிவிட்டது
தாகத்தைத் தீர்க்கவே மோரும்
வேகட்டும் என்றாய் வெந்துவிட்டது
தேகத்தை வளர்க்கவே சாதமும

கசப்பதில்லை வாழ்வு என்றும்
வசமான மனமதைக் கொண்டு
விசம் நிறைவார்த்தை நீக்கி
நிசமான அன்பே கொண்டால்

அதையே எண்ணி மருகாதே தோழா
விதையே பத்துக்கு ஒன்று முளைவிடும்
கதையே மாறும் முயற்சி வினையாக்கும்
இதையே நினை தோல்வியே வெற்றியாகும்.

இருக்குமன்றோ பாதையில் முள்
உருக்குமன்றோ பேதை மனதையும்
கருக்குமன்றோ மேகமும் ஒருநாள்
பருக்குமன்றோ முள்ளும் ரோஜாவாய்!

தொடருவேன் சான்றோர் பாதையை
படருவேன் கொடியா யவர்பாதம்
இடருவே னாயினும் விடேனெப்போதும்
மடமையே இதைச்செய்யாது போனால்.

இந்த நிலை யாருக்கும் வேண்டாம்
நொந்தே போனேன் கண்டு நானும்
வெந்து தணியுமோ போர்க் களம்?
சொந்த மக்களைக் கொல்லும் நிலம்.

இறைவனே என்றும் தலைவன்
சிறையது மீட்கும் காவலன்
மறைகள் காணா முதலவன்
கறைகள் இல்லா காவியன்.

ஆட்கொள்வானே ஆதி பக்தனை
கட்டிக் கொடுப்பானே சோதனையை
கட்டுக்குள் வருவானே அன்பையே
தட்டில் காணிக்கை தரும்போது.

நிசமோ இங்கே நடப்பது?
விசமோ மக்கள் மனதில்?
பாசமோ ஆட்டிப் படைக்குது!
வேசமோ அதையும் உடைக்குது.

ஒன்றுமில்லை என்று சொன்னவளே உயிர்
சென்றபின் எல்லாம் உண்டு என்பாயோ?
நின்ற இதயத் துடிப்பைத் துவக்கும்
உன்றன் பார்வைச் சாவியைத் தருவாயோ?

உனக்கொன்று என்று தெய்வம் பார்ப்பதில்லை
தனக்கு வேண்டுமென்றும் இறை கேட்டதில்லை
சினந்து தெய்வம் என்றும் தோன்றுவதில்லை
வனந்தனில் மழை மரம்பார்த்து பொழியுமோ?

பயிர்களுக்கு களையே எதிரி; மனித
உயிர்களுக்கு கோபம் எதிரி; அன்புக்
கயிறுகொண்டு கட்டு மனதை; பயிரும்
வயிறு வளர்க்க தன்னையே தருகிறதே!

நடக்கிறது அனைத்தும் நன்மைக்கே
தடம்புரளாமல் பூமியெப்போதும் சுற்றுதே
வடம்பிடித்த தேர்போல் சரியாயோடுதே
மடம்பிடித்த மனிதனையும் தாண்டி.

விட்டது போலும் தோன்றும் கையை இறை
எட்டவே நிற்கவில்லையே கடவுள் என்றும்?
கட்டுத்தறியின்றி உலகம் ஓடுமானால் அதுவும்
நட்டகடவுள் இச்சையின்றி நடந்திடுமோ பாரில்?

இனிமையானதே வாழ்வு முழுதும்
தனித்தனியாய் வாழ்ந்தால் என்னவுண்டு?
கனிந்து உருகுவோம் அன்புகொண்டு
இனியேனும் செய்வோம் நன்மைமட்டும்.

கொடுக்கவாவது செய் கல்வியை
தடுக்காமலாவது இரு கொடுப்பதை
வடுக்களாகாமல் தடு சொற்களால்
மடுக்களாகிப் போவாய் இல்லாவிடில்.

உதவு என்றும் அக்கம்பக்கம் மனக்
கதவு திறந்தால் அன்பும் பெருகும்
பதவி வந்தாலும் தியாகம் செய்
இதமாய் கடமை மட்டும் செய்.

நானே செய்தேன் என்றே எண்ணலாமோ?
தானே வருமே கடமை செய்தால்
வானே முட்டும் வெற்றி கிட்டும்
கோனே வணங்கும் உயர்வும் வருமே.

வாழ்கின்றான் மனிதன்
பாழ்படும் மனத்தினாலே
காழ்ப்புணர்ச்சி கொள்வதாலே
வீழ்கின்றான் படுகுழியில

கனவா கண்டீர்?
அனலாய் உருக்கி
புனலாய் குளிர்ந்து
நனவாய் வாழ்வீர்!

உறவாய் வந்தாயே நீயும்
திறவாய் மனக்கதவை; என்றும்
மறவாய் என்றே நின்றேன்
இறவாது என்றாயே நம்காதல்.

துன்பமில்லை இன்பமும் இல்லாதிருந்தால்
அன்பதுவே வேண்டும் ஆசையுமறுப்போம்
இன்றே இதனைவிதியாய் வைப்போம்
நன்றே செய்வோம் நாளும் உலகில்.

கெடும் என்றே தொிந்தும் நம்பான்
விடும் உயிரை யாக்கை அன்றே
சுடும் நெருப்பில் போகும் இன்றே
இடும் தர்மம் தவிர யாவும்.

நிசமான அன்பு மட்டும் இருந்தால்
வசமே அனைவரும் உங்கள் பக்கம்
கசக்கும் கோபம் விட்டு வாருங்கள்
விசமும் அமுதமாய் மாறும் இங்கே

விடலாமோ நட்டாற்றில் நட்பை
சுடலாமோ வார்த்தைகளால் நெஞ்சை
இடலாமோ வெண்பாலில் நஞ்சை
நடலாமோ வெறுப்பென்னும் விதை?

கொஞ்சமும் மனமிரங்கா எதிரியைத்
தஞ்சமென்று வணங்கல் ஆகுமோ?
விஞ்சும் வீரம் கொண்டே இங்கு
மிஞ்சும் எதிரியையும் கொள்வோம் காவு.

அதிகமே எதிலும் வேண்டாம் இங்கே
பதிகமே பாடி சொல்கின்றேன் நானும்
விதிவழி செல்லும் வாழ்வில் நாமும்
மதிவழி செல்வோம் அன்புடன் நாளும்.

வாழ்வோம் என்றும் என்று நினைத்தால்
வீழ்வோம் நாமும் என்றோ ஒருநாள்
தாழ்வே இன்றி வாழ வேண்டில்
பாழ்படுத்தா அன்பைக் கொள வேண்டும்.

நகருதே வாழ்க்கை ஒவ்வொரு நொடியும்
பகருதே உண்மையை ஒளியின் விளக்காய்
தகருதே ஆசையாம் மனக்கோட்டை நாளும்
அகமதே தூய்மையானால் துன்பமே இல்லையே.

முடிவுகள் தானே அடுத்த துவக்கம்
விடிவுகள் தானே நாளின் துவக்கம்
கடிந்தாலும் அன்பால் மெழுகாகு
மடிந்தாலும் மண்ணில் விதையாகு.

மறக்காதே என்று மூன்று சொல்வேன்
மறக்காதே எதிரியை அடியோடு ஒழிக்க
மறக்காதே முள்ளை வேரோடு அழிக்க
மறக்காதே தீயை மூலத்தில் அணைக்க.

ஏற்குமோ வலியோர்க்கு எளியோர் தருதல்
சாற்றும் வகையில் அகந்தை தன்னை
வீற்றிருக்கும் இறைக்குத் தந்தால் நாம்
சேற்றில் இருந்தாலும் தாமரையாய் வருவான்.

நாராயணன் தூணிலும் இருப்பான் என்று
பாராயணம் செய்தான் பிரகலாதன் அவன்வழி
சேராமல் எங்ஙனம் அடையலாம்? ஒருபோதும்
சோராமல் துதிப்போம் வாழ்வு கடைத்தேற.

பணி என்னும் கடமை கொண்டு
அணி செய் உழைப்பால் நாட்டை
மணி வளம் நிரம்பக் கண்டோம்
பிணி இல்லா வாழ்வு வாழ்வோம்.

பிரதிபலிப்போ அகத்திற்கு முகம்?
குரலிலும் அன்பே ஒழுகும்
சிரத்தின் நயனம் என்றும்
இரவின் நிலவாய் மலரும்.

பிரார்த்தனைக்குப் பலன் இறைவன்
தராது போனதில்லை எதுவும்
இராது போனாலும் நிம்மதி
வராது போனதில்லை மனதில்.

இல்லையே என்னும் வருத்தம் நீடிக்குமோ?
தொல்லையே கொண்டு வந்து சேர்ப்பிக்குமோ?
அல்லவை தேய அறம்பெருகு மென்றேகுறள்
நல்லதை நாட வழிசொன்ன வாழ்வில்?

என்று தணியும் இந்தப்போர் வெறி
கொன்று குவித்தால் ஏதிங்கே அமைதி?
தொன்று வரும் அன்பை வளர்த்தால்
அன்று தளிர்க்கும் மனிதநேயப் பொறி.

எம்மால் ஏதுநடக்கும் என்று எண்ணாதீர்
உம்மாலும் ஏதும் நடக்காது உணர்வீர்
நம்மாலே நடக்கும் ஒற்றுமை கொண்டு
செம்மையாய் திட்டம் வகுத்து நடந்தால்.

திரட்டிடுவோம் படையை நன்றாய்
மிரட்டிடுவோம்; கேளாவிடில் உடனே
விரட்டிடுவோம் பகையை வெளியே
இரட்டிப்பு மகிழ்ச்சி பொங்குமங்கே!

ஒருநாள் வருமோ சமாதானம் இங்கே?
திருநாள் அதுதான் மகிழ்வோம் அன்றே
கருநாள் அதுவரை தொடரும் எனினும்
வருநாள் முழுதும் அதற்காய் உழைப்போம்.

அறம் செய்து வாழ்வோமே நாமே
முறம் கொண்டு் புலி விரட்டும்
திறம் கொண்ட பெண்டிரும் உண்டு
புறம் கொண்டே ஓட்டுவோம் பகை.

வெற்றி நமக்கே முழக்கம் இடு
சுற்றி வரும் பகைவர் கூட்டம்
அற்று ஓடும் வகையில் நாமும்
பெற்று சூடிடுவோம் இங்கே வாகை.

ஏனோ மாற்றம் எந்தன் நெஞ்சில்
தேனோ சொரியும் என்றும் மனதில்
மானோ துள்ளும் உடல் முழுதும்
நானோ மகிழ்வேன் அன்பின் பொழிவில்.

அருள் வேண்டுவோம் இறையிடம் நாளும்
மருகியே நின்ற சகோதரிக்கு நன்றிமன
முருகியே யாத்திரை மேற்கொண்டு செந்தில்
முருகனவன் பாதம் மேவுவோம் பக்தியுடன்.

சிறப்பு பூக்களில் மணம்
சிறப்பு மயிலின் தோகை
சிறப்பு இறைவன் கருணை
சிறப்பு மனிதரில் தலைவன்

சிறப்பு மேகத்தில் கருப்பு
சிறப்பு பாலின் வெண்மை
சிறப்பு காதலில் புரிதல்
சிறப்பு மழலையின் சிரிப்பு
சிறப்பு தாய்மையின் பரிவு
சிறப்பு தந்தையின் பொறுப்பு
சிறப்பு கல்வியின் நிலைப்பு
சிறப்பு குருவின் பகிர்வு
சிறப்பு மாணவர் ஈர்ப்பு
சிறப்பு தொழிலில் நேர்மை
சிறப்பு செலவில் சிக்கனம்
சிறப்பு சேமிப்பில் அக்கறை
சிறப்பு மன்னன் செங்கோன்மை
சிறப்பு இருளில் ஒளி
சிறப்பு போரிலும் நிதானம்
சிறப்பு வேகத்தில் விவேகம்
சிறப்பு மனதினில் **அன்பு**

நம்புங்கள் இறைவனை மட்டும்
வம்பேதும் நெருங்காது என்றும்
கம்பாய் இருப்பதைக் காட்டிலும்
அம்பாய் எய்துவோம் லட்சியம்.

வணங்கிடுவோமா என்னும் கேள்வி ஏன்
அணங்குகளே நம்மன்றத்தில் இன்னும்?
உணவை மறந்தாலும் மறக்கலாம்
பணந்தனை வெறுத்தாலும் வெறுக்கலாம்
மணந்தரு மலராம் இறைவனை
கணமும் மறக்கலாமோ சகோதரி?

கேட்டேன் நானும் ஆயிரம் வரம்
ஏட்டில் இல்லாத அறிவும் அடங்கும்
மேட்டில் ஏறும் கனவும் அதிலுண்டு
ஈட்டும் வகையில் தருவான் இறைவன்.

அல்லல் படுகின்றனரே என்று வருந்தவேண்டா
தில்லை கூத்தாடும் இறைவன் பார்ப்பான்
எல்லை மீறும் காட்டுமிராண்டித் தனதையும்
இல்லாதாக்க அவனால் மட்டுமே முடியும்.

கொண்டு செல்கின்றோம் என்று நினைக்காதீர்
விண்டு செல்ல எதுவுமில்லை யிப்புவியிலே
கண்டும் காணாமல் போவதும் முறையல்ல
தண்டின்நீர் போல் ஒட்டாமல் ஒட்டியிருப்போம்.

ஒன்றாய் வாழ்வது வாழ்வுக்கு நன்று
மென்றே தின்பது உணவுக்கு நன்று
வென்றே சிறப்பது போருக்கு நன்று
அன்றே முடிப்பது வேலைக்கு நன்று.

என்றுமே தாய்மை இனிமை தான்
கன்று பசுவைக் கண்டால் துள்ளும்
அன்னை பரிவு யாருக்கிங்கே வரும்
தன்னையே தாரை வார்க்கும் குணம்?

அறிவுரைகள் பின்பற்றத் தான்
அறிஞர் பெருமக்கள் தருகிறார்
அறிந்திருக்க வேண்டும் அவற்றை
செறிவுடன் செயல்படவே அவை.

அமைதி மனதில் வரவே பிரார்த்திப்போம்
இமைமூடி இங்கே இறையை தியானிப்போம்
உமைபாகனும் புத்தனும் ஏசுவும் அல்லாவும்
எமைக் காத்தால்தான் வருமோ நிம்மதி?

தத்துவம் என்றால் என்ன?
வித்தகர் ஒருவர் சொன்னார்
சத்தமாய்ப் புரிந்த ஒன்றை
சுத்தமாய்ப் புரியாது சொல்வது!

வாழ்வெங்கும் நிம்மதி விரவ
தாழ்வென்பதே காணாது பரவ
காழ்ப்புணர்ச்சி இல்லாமல் மனதின்
தாழ்நீக்கி அன்பையே சொரிவோம்.

முக்தி நிலை அடையவே
யுக்தி ஒன்று சொல்வேன்
பக்தி நெறியும் வேண்டும்
சக்தி துணையும் வேண்டும்.

இளப்பு என்றும் வருமோ வாழ்வில்
அளவில் நிறையுடன் வாழ்ந்து விட்டால்
களவில் கைவைக்கத் துணியா விட்டால்
இளமை மனதில் என்றுமிருந்து விட்டால்.

இருக்கும் செல்வம் போதும் என்றால்
ஒருக்காலும் ஆவீரோ ஏழை இங்கே?
கருக்கும் மேகம் கனக்கும் வெள்ளியை
உருக்குமாப் போல் நீரைப் பொழியும்
தருக்கமேதும் செய்யாது தானம் செய்வீர்
வருத்தம் நீங்கும் ஞாலம் போற்றும்.

வெற்றி கொள்வார் மனத்தை
பற்றி இருப்பார் பரமனை
உற்று இங்குள்ளே நோக்காது
சற்றும் வெளியே பாரார்!

புகழ் வந்து சேர்ந்தது போலே
இகழ் வந்தும் சேரும்; எனவே
அகழ் வாராய்ச்சி செய் மனதை
நிகழ் காலம் தன்னில் நிறுத்தி.

அழியாது பூமிதனில் நிலைக்க வேண்டின்
ஒழியாது தானமும் தர்மமும் செய்வதுடன்
பழியாது நெறியிலே நிற்கவும் வேண்டும்

கழியாது அன்பைச் சொரியவும் வேண்டும்.

காண்பித்தாரே நல்வழியை முன்னோர்
மாண்பாய்ச் சிறக்கும் அவ்வழியை
நோண்பாய் எடுத்தே சென்றிட்டால்
யாண்டும் இல்லையே மரணம்.

நகைப்பே பாரில் மனிதனின் தனிக்குணமாம்
குகைவாழ் மனிதனும் கொண்டி ருந்தானாம்
வகை வகையாய் சிரிப்பும் உண்டிங்கே
பகையும் முறிக்கும் சிரிப்ப துவே

ஈகை என்பதெ துவென்று சொல்வேன்
ரேகை அழியும் வண்ணங் கொடுப்பதே
வாகை சூடும ரசாயினுந் தராவிடில்
தோகை விரித்தாடு மயில் போலாமே.

எல்லையில்லா இறைக்கு முண்டிங்கே எல்லை
தொல்லை தரும் மனம்.

பலம் பொருந்தினால் வலியவனை அழிக்கலாமோ?
நலம் வருமாறவர்க் கனைத்தும் செய்தாலென்ன?
நிலம் கவர்ந்தாலும் கேட்க யாருமில்லையோ?
தலம் தலமாய்ச் சுற்றினாலுமுன் பாவந்தீ ருமோ?

யுத்தம் என்றும் வேண்டாம் நண்பா!
ரத்தம் சிந்தும் பகைமை வேண்டாம்
தத்தம் வாழ்வு மட்டும்பார்த்து நாமும்
பித்தம் கொண்டே அலைதல் வேண்டாம்!

காகிதங்கள் என்ன செய்யும் பாவம்?
ஆகிய மரங்களின் சமாதி தானேயது?
போகியாய் வாழ்ந்து மண்ணில் சாகாது
யோகியாய் பணிந்து என்றும் வாழ்வோம்!

காதலை விடக் காதல் வேண்டும்!
காதலை விடக் காதல் பிடிக்கும்!
காதலை விடச் சொலின் சாதல்
காதலை விடச் சுகம் ஏது?

ஏதேது இந்தப் பக்கம்
யாரையுந்தாங் காணலியே
பருத்தி வெடிச்சிருக்க
மாங்கா கனிஞ்சிருக்க
போகம் வெளெஞ்சிருக்க
ஓடி வருவாரோ!
கன்னியத்தாந் தேடி?

பெற்றிடவே மாதவம் செய்தாரே
வெற்றிடத்தை வாரிசால் நிரப்ப
கற்றவரை உய்விக்க வேண்டுமடி
உற்றவராம் பெற்றோரைப் பேணு.

ரசிக்கின்றேன் இயற்கையை
உதயத்தின் உற்சாகம்
காலையின் தெளிவு
நடுப்பகல் உச்சம்
மாலையின் சோர்வு
இரவின் ஓய்வு
மீண்டும் மீண்டும்
வாழ்வைத் தின்னும்
இருந்தும் நானிங்கே
ரசிக்கின்றேன் இயற்கையை

இந்தியன் அன்றோ அஹிம்சை விதைத்தான்?
இந்தியன் அன்றே அன்பை போதித்தான்!
இந்தியன் என்றோ பல்கலை வளர்த்தான்!
இந்தியன் என்றே பெருமிதம் கொள்வோம்!

வீழ்ச்சியில் அருவியும் அழகு

முயற்சியில் சாதனை அழகு
பயிற்சியில் தேர்ச்சி அழகு
அயர்ச்சியில் தூக்கம் அழகு!

வெந்திடுமே சமத்துவத்தில் ஜாதீ!
வெந்திடுமே சமத்துவத்தில் மதத்தீ!
வெந்திடுமே சமத்துவத்தில் இனத்தீ!
வெந்திடுமே சமத்துவத்தில் கலவரத்தீ!

சரிவோ மழை மேகத்தின்று விழுவது?
சரிவோ அருவி மேலிருந்து விழுவது?
சரிவோ வாழ்வில் தடைகள் வருவது?
சரிவே தோல்வியில் துவல்வது!

இறை கொண்டே எங்கள் மனதைச்
சிறை செய்தார் மன்னை இனியவர்
பறை கொண்டே முழங்கும் வண்ணம்
முறை செய்தே யாத்திரையும் முடித்து.

அவனென சொன்னான் சுட்டிக் காட்டி
இவனென சொன்னான் அவனோ தட்டி
புவனம் சொல்லுமோ இருவரில் யார்
கவனமாய் ஆட்சி புரிவாரென் றரசியலில்?

வாட்டம் நீக்க வழியுண்டு சொல்வேன்
ஆட்டம் போட்டு ஞாலம் தன்னில்
கேட்டும் கொடுக்கா நிலை மாற்றியே
காட்டும் சமத்துவம் வந்து விட்டாலே!

ஜனநாயகம் மக்கள் கையில்
கனநாயகம் ரவுடிகள் கையில்
சினநாயகம் கொண்டு வாக்கிடில்
மனநாயகம் வருநாளை கையில்

தெளிவில்லா அரக்கர்க்குப் பித்தம்

எளிதாய்த் தெளியும் மரணத்தில்
களித்திருக்கும் மூடரே அறிவீர்
அளித்திடும் செல்வமே நிலையென!

ஒழிவர் பிறரொழிய நினைப் பவர்
தமைப் போல்நினை யாதவர்.

ஒழுகும் அறமோ துணை நிற்கும்
கழுகும் உண்ணும் வகை கொண்ட
அழுகும் உடலோ தரையில் வீழும்
மழுவான அறங் காத்துக் கொள்!

தலை இருக்க வால் ஆடலாமோ?
மலை இருக்க மடு பாயலாமோ?
கலை தேயும் நிலவு நிற்குமோ
அலை வளர் ஆதவன் முன்னே!

கெடும் படி தீமை செய்வாயேல்
சுடும் படியாகி விடும்!

வேள்விக்கே பாகம் கொடுத்தாய் மனிதா
கேள்விக்கே தாகம் தீர்ப்பாயே இனிதாய்
மாள்கின்ற போகம் வேண்டுமா சையின்றி
நாள்தோறும் யாகமா யேழைக்கு ஈந்தால்!

காதல் என்பது இருவர் நித்தம்
சாதல் என்றே அறி!

சாதலிலெனச் சொல்வர் காதலின் முடிவை
ஆதலினால் செய்வோம் பசுமைக் கொடியை
போதலில் கொண்டு போவதொன் றுமிலை
வேதத்திலும் உண்டே நன்றான காதலென!

சாதலிலெனச் சொல்வர் காதலின் முடிவை
ஆதலினால் செய்வோம் பசுமைக் கொடியை

போதலில் கொண்டு போவதொன் றுமிலை
வேதத்திலும் உண்டே நன்றான காதலென!

கத்திரியாய் வெட்டி விட ஆகாதே
முத்திரியால் முடிந்து விடின்!

மாயப் பொருளே மயங்கி நிற்கும்
நேயப் பொருளாய் விரைந்து மாறி
பேயப் பொருளாம் ஆணவம் நீங்கி
காயப் பொருளது கரைந்து விட்டால்

காதலித் துப்பார்த் தும்மயங் குவார்
பேதலித் துப்போகின் றவர்.

மிச்சம் என்ன உண்டு காண்போம்
அச்சம் என்ன கண்டு காலாலதைத்
துச்சம் என்று விண்டு கொண்டால்
உச்சம் என்ன கண்டு கொள்வோம்!

சூத்திரம் என்பதெது எனின் பழஞ்
சாத்திரம் சொன்னத றிதல்.

அழற்சியில் போகாது மனம் விரும்பியோர்
கழற்சியில் விடாதிருந் தால்.

இல்லையும் இருந்தும் குழப்பம் தந்தும்
சொல்லில் திருத்துநல் லுள்ளம்.

உள்ளும் புறமும் ஒன்றெனும் நிலையில்
பள்ளம் நிறைசமமா யோடும்!

கசக்கும் பாகையிலும் உண்டே நன்றாய்
வசக்கும் நீரிழிவுக்கு மருந்து.

விஜய நகரப் பேரரசர் முன்பு

விஜயம் செய்து போனா ரவர்க்கு
விஜய லட்சுமி வரமும் தந்தாள்!
விஜயு மிப்போ திரையில் வந்தாரே!

வரந்தந் ததினால் வருந்தும் தவிப்பு
சிரந்த னிலேயங் கிருக்கும் - உரங்கொள்
தரத்தி லிழிந்த அசுரர் வழியாய்
மரத்த டியிறை யுனக்கும்

சமமே விருந்தும் சமமே மருந்தும்
கமழும் மணத்தால் நவிலும் - சமயம்
திரட்டிக் கரத்தில் தவழச் செய்வ
ரிரட்டைத் திருத்தாய்க் குறள்.

தம்பி வருவது அண்ணல் பணிவிடைக்கே
நம்பி வருவது பூமலர் - வம்புவர
அம்பு எடுத்தனன் கோடுவ ரைந்தனனே
தும்பி கொடுத்திடும் தேனாய்.

ஆக்குமே நாமம் குபேரனாய் ஏழையை
ஆக்குமே நாமம் தபோதனராய் - ஏக்கமும்
போக்குமே; ஈசனின் நாமம் செபிப்பவர்
வாக்குமே நோய்க்கு மருந்து.

தீ யது கோனவன் செய்வானேல் நாயதும்
வாயது மூடுவது மேன்மை.

சமமே மனமாய்ச் சமைத்து இமயச்
சிகரம் கரத்தில் எடு.

வாழி யெனவுனை வாழ்த்த வயதிலை
ஆழி யதனாழங் காண்பேனோ நாழிகொண்டு?
சின்னஞ் சிறுவனாய்ச் செய்திடுஞ் சேட்டையைப்
பின்னமின்றி யேற்றிடுமன் னையே.

விழை(த்)த லெவர்க்கு மெளிதே விதியிட்
டுழைத்த லவர்க்குங் கடிதே - பிழைத்தல்
பொறுக்கும் மனத்தி லினிக்கும் நிதானம்
நிறுத்தும் சறுக்கு மவரை.

எண்ணுதல் எவர்க்கும் எளியதே ஆகும். அதை விதிகள் பல இட்டு உழைத்தல் அவர்க்கு கடிதே ஆகும். அவ்வாறு இல்லாது பிழைத்தாலும், தோல்வியைக் கண்டு துவளாது, அதனைப் பொறுத்து மனத்தினில் இனிக்கின்ற வகையில் கைக்கொள்ளும் நிதானமே, அவரைச் சறுக்காமல் நிறுத்திவைக்கும்.

நிகரேயாம் மென்மையொடு வன்மை பகரும்
நண்பர் பகிர்ந்திடும் நட்பு.

அறியாமை தானெனக்கென வாளா தெறித்தேன்
சலசய சூரியப் பாவால்.

சமமே குணமாம் சமமே உணவாம்
சமமே குலமாம் சமமே இனமாம்
சமமே நினைவால் சமமே கணமும்
சமமே வயதும் சதமே!

புதுமை யறிவிய லாக்கம், வருமே
முதுமை தறித்திடின் தேக்கம் - பதுமை
தருமே விடாது பணிவிடை யோர்நாள்
வருமே யியந்திர ஆட்சி.

மனிதர்களின் அறிவியலால் நித்தம் புதுமை தான். ஆனால் அவருக்கும் முதுமை வந்திடின் நேர்ந்திடும் தேக்கம். இதைத் தீர்த்திடப் பதுமை (ரோபோட்!) மூலம் எல்லாம் செய்ய நினைத்தால் ஓய்வில்லாப் பணிவிடை கிடைக்கும். ஆனால் ஓர் நாள் வருமே அந்த இயந்திரத்தின் ஆட்சியும்!

வெற்றி யொருவராயின் தோற்றோர் பலராவர்
கற்றே னனைவரும் வெல்ல - முற்றாகவே
அற்றிடுந் தன்னலப் பாங்ககற்றி யோர்குழுவாய்
உற்றிடு மேற்றங்கைக் கொண்டு.

நித்தங் கரையிலே ஆடியலை சத்தமாய்
முத்தங் கொடுப்ப தழகு.

ஒடுங்குமே மாயமனம் ஒன்றி இருந்தால்
துடுக்காய் அரவுமது துள்ளும் - மிடுக்காய்
பயணம் நிலமாறும் நின்றே பரவும்
வயணஞ் சிரசில் வரவு.

மாயமனம் ஏதேனும் ஒரு பொருளில் ஒன்றியே இருந்தால், துடுக்காய் குண்டலினி சக்தி துள்ளும். மிடுக்காய் பயணம் கொண்டு ஆறு ஆதாரங்களிலும் நின்று நின்று பரவி, பின் நிலைகொள்ளும் (வயணம்) உச்சிக்கு வந்ததும்.

வாழாதார் வாழவைப்பின் வாழ்வரே வாழைபோல்
தாழாது தம்மக்கள் மரபும்.

குற்றவாளி பெற்றிடுந் தண்டனை பாதிக்குஞ்
சுற்றத்தாரும் நொந்து அழ.

வேண்டாம் சுற்றும் உலகினில் சண்டை
வேண்டாம் துள்ளும் மனதினில் வெறுப்பு
வேண்டாம் உருளும் கண்களில் பேதம்
வேண்டாம் துவளும் தோல்வியின் வெற்றி!

அஃது எனினது தூரமாம் பக்கம்
இஃது இவிட மெனல்.

அவனியில் சோற்றுக்குப் பஞ்சம் தொடரும்
நவயுக வாய்ப்பால் வருமே - துவண்டிடும்
விவசாயி வேர்வை விளைவாய் விழிநீர்
உவப்பெனக் காணா விடில்.

வேகமாகச் சுற்றி வரும் அவனிக்கு சோற்றுப் பஞ்சம் தொடர்கின்ற நவயுக வேலைவாய்ப்பினால் வந்திடும். எப்போது? துவண்டு போகும் விவசாயியின் வேர்வைக்கு விளைச்சலாய் அவனது கண்ணீர் ஆனந்தக் கண்ணீராக இல்லாத

பட்சத்தில்!

யாரென்று தேடிநான் களைத்த வேளையில்
பாரென்று நாடிநான் பிழைக்க வந்தவளே
வேரொன்று ஊன்றி அன்புச்செடி வளர்த்தாய்
பாரெங்கும் அதுபோல் வேறெங்கும் காணேனே.

மேன்மையுறும் நல்நீ தி மூன்று சொல்வேன்;
வான்முட்டப் படித்தாலும் பகிர்ந்து கொடு!
தேன்அமுது கிடைத்தாலும் பகிர்ந்து கொடு!
ஊன்கண்ணை இறந்தாலும் பகிர்ந்து கொடு!

பணிந்திட்டால் என்றும் மேன்மையே, நெஞ்சம்
துணிந்திட்டால் என்றும் வெற்றியே, கோபம்
தணிந்திட்டால் என்றும் சாந்தியே, புன்னகை
அணிந்திட்டால் என்றும் மகிழ்ச்சியே.

திருட்டுத் தனமின் றிதயந்திருட வந்தவளே
திருட வந்துவிட்டுத் திருட்டுக் கொடுத்தாயே
குருடனென் பார்வை வருடலில் திறந்தாயே
உருக்கு மன்பிலென் வாழ்க்கை முடிப்பாயே.

நாள் எனின் இரவும் பகலும்
கோள் எனின் உச்சமும் நீ ச்சமும்
வாள் எனின் உறையும் ரத்தமும்
தோள் எனின் வீரமும் காதலும்.

தனையே மறந்து முனை மறப்பேனோ?
சுனைநீர் வெல்ல இனிப்பை மறுப்பேனோ?
வினையே தடுப்பினு முனைத் தவிர்ப்பேனோ?
மனையா யிதயம் கொண்டாயினி மாிப்பேனோ?

இருக்கையிலே அமர்ந்து வேலை பார்த்து
இரு(க்)கையிலே நிறைய ஊதியம் பெற்றாலும்
திருக்கையால் உழவன் வேலை பார்க்காவிடில்

செருக்குடன் அருந்திட உணவிங்கே கிடைத்திடுமோ?

வளர்கின்ற வெண்மதி மேகமெத்தை போர்த்த
தளர்கின்ற கண்ணுமிமை மூட - உளமகிழச்
சேர்க்கின்ற மாலை கரையுடையத் தந்திடுமோ
கோர்க்கின்ற கண்ணுவகைச் சலசம்.

வளரும் வெண்மதி மேக மெத்தை போர்த்திக் கொள்ள, தளரும் வகையில் கண்களாம் மதியும் இமைகளைப் போர்த்தும். உள்ளம் மகிழச் சேர்க்கின்ற மாலை கரையெல்லாம் உடைத்திடக் கோர்க்கின்ற ஆனந்தக் கண்ணீராம் முத்தினைத் தந்திடுமோ?

திகழும் மார்பில் பட்டாடை தவளும்
பகல் மறைத்த மாயவன் புன்சிரிப்பில்
அக(ல்) விளக்கு தண்ணொளி பரப்பும்
இகபர பதவியும் தேடாது கிட்டும்!

பக்தியொடு மனமுருகி அன்புடன்
சக்தியுமை பாகனை வணங்கின்
முக்தி கிடைத்தல் உறுதி.

உளவு செய்தாயோ?
உளம் புகுந்தாயோ?
களவு செய்தாயோ?
களம் புகுந்தாயோ?

சிலிர்க்கிறதே தென்றலாய் வருடினால்
ஜொலிக்கிறதே கண்களைக் கண்டால்
தெளிகிறதே புரியாத பலவும்
மிளிர்கிறதே அன்பினால் உள்ளம்

நீயென்றால் நாந்தானே அருகாமை அறியாயோ?
ஏயென்றால் திரும்பியே உரிமை தருவாயோ?
தாயென்றதும் தந்தாயே அருமை அறிவேனோ?
தாயென்றால் நியாயந்தான் எனை மறுப்பாயோ?

பூஜிக்க தேவையில்லை மணமிகு மலர்கள்
பூஜிக்க தேவையில்லை அழகிய சிலைகள்
பூஜிக்க தேவையில்லை அர்ச்சனை மந்திரம்
பூஜிக்க தேவை உருகும் மனமும் அன்பும்.

சேர்ந்தாலே பொங்கும் இன்பம் அன்பில்
தேர்ந்தாலே விம்மும் நெஞ்சம் பக்கம்
சார்ந்தாலே துள்ளும் உள்ளம் தணிய
நேர்ந்தாலே நிறையும் மனங்களின் தாகம்

கடன் வாங்கினோர் அன்று கலங்கினார்
கடன் கொடுத்தோர் இன்று கலங்குகின்றார்
கடன் அட்டை ஜம்பமாய்க் கொண்டே
கடன் பெற்றோர் என்றும் கலங்குவார்.

அறிவாய் எந்தன் மனம்
அறிவாய் எந்தன் எண்ணம்
அறிவாய் எந்தன் எல்லாம் - அதனால்
அறியாய் உன்னை நீ யே!

இலவம் மெத்தையில் சொகுசெனச் சாய்ந்து
கலமது கடைசொட்டு வெறியுட னுறிஞ்சித்தன்
நலமதே கருதுமந்திரி யாளரசராம் மக்கள்வாழ
நிலமதும் இன்றித்தவிப் பதேயின்று நாடு.

சொல்லிட்டால் தீ ருமோ மனதெழு ஆவல்கள்
சொல்லாவிடில் இலையோ மாசிலா நாடல்கள்
சொல்லி முடிந்திடுமோ முடிவிலாத் தேடல்கள்
கல்வெட்டாய் மனத்திலி வையிருப்ப துணரின்.

தரணியில் புகழுடன் செல்வமும் வாழ்வும்
தரவைக்கும் தம்பொருள் நுகரும் மாந்தர்க்குத்
தரமுள்ளதைத் தராது ஏமாற்றும் வணிகரைத்
தரதரவென இழுத்தவர் பொருள் நுகரச்செய்!

பெற்றிட முடியா மாதவப் பரிசே!
பற்றும் கைப்பிடி தட்டிடாக் குரங்கே!
வெற்றிடம் நிரப்பும் உற்ற தென்றலே!
வற்றாத அன்பில் மற்றெலாம் விட்டேனே!

அமைதி வடிவென மோனம் நிறைந்தோன்
சுமையும் தந்தே தாங்கும் ஆடலான்
எமையுங் காக்கு மெல்லோர்க்கு மெளியன்
உமையொரு பாகன் பாதம் பணிவோம்.

கோடான தேகம் வில்லென வளைந்திடில்
கேடான நோய்கள் கிட்ட நெருங்குமோ?
ஈடான தெய்வத்தைக் காண முடிந்திடில்
வீடான மோக்ஷம் தனியாய் வேண்டுமோ?

இவை இங்கே இதிலுண்டு என்றும்
அவை அங்கே அதிலுண்டா என்றும்
சுவை நிரம்பிய பாக்கள் கொண்டே
அவை நிரம்பும் மக்கள் வெல்வோம்!

சிறப்பது மனிதர்க்குப் பிரித்துணரும் ஆறறிவாம்
திறப்பது யாவும் சமமென்று உணர்கையில்
பிறப்பது கணமும் நனவினில் வாழ்ந்தால்
இறப்பது உண்டோ என்றேனு மிம்மாநிலத்தே.

ஒற்றுமை என்றால் கூடியிருப்பதா கேட்டேன்
வெற்றியில் மட்டும் மகிழ்ந்திருப்பதா கேட்டேன்
சுற்றம் இணைந்து சுகித்திருப்பதா கேட்டேன்
அற்றம் நீக்கியாக்கம் பெருக்குவதெனக் கண்டேன்.

மலருமே உறவும் அன்பு விதையால்
மலருமே மனமும் பாச மழையால்
மலருமே தினமும் நேச உரத்தால்
மலருமே உயிரும் தியாக ஒளியால்.

வழிப்பறி செய்யும் நோக்குடன் வந்தாய்
வழிந்தோடும் அன்பினில் மூழ்கிடச் செய்தாய்
வழிநாள் முழுதும் இணையா இணையாய்
வழிகாட்ட என்கரம் பிடித்தே தொடர்ந்தாய்

காணவே முடியா காற்றாகி நின்றாய்
பேணவு முடியா தொலை தூரமானாய்
நாணம் அணியாய்க் கொண்ட அழகாய்
பாணம் விடுத்தே இன்னுயிர் ஆனாய

பாரினிலே செல்லாத செல்வமென வந்தாய்
பாரினிதே விழிவயலில் நீ ரறுவடை கண்டிடலாம்
பாரியவன் நாணுமாறு அன்பதையும் வாரியே
பாரியதில் நதிவற்றா நற்சுவை கூட்டுமாறே.

தந்திடும் கரந்தனில் தகைமை கண்டேன்
முந்திடும் பண்பொடு முதன்மை காணேன்
பிந்திடும் பண்பொடு அடிமையுங் காணேன்
வந்திடும் இணைத்துணை தூரங் காணவே!

பயம் இல்லை என்றால் இங்கே
செயம் நமக்கு உண்டு காண்போம்;
தயங்கா முயற்சி விதை கொண்டால்
மயங்கா வளர்ச்சி என்றும் உண்டே!

மாநிலத்தில் வீழ்ந்த பேரருவி ஆனோம்
நாநிலமும் செழித்துப் பயனுற்றுப் பாரென
ஆநிரைகள் சொரியும் பாலருவி போலே
மாநிலத்தில் வீழ்ந்திடும் தரை காணாதே!

காரணங்கள் தேடியுங் கண்ணில் காணேனே
ஆரமில்லா வட்டமாய் சுற்றிச் சுழன்றேனே
பாரமில்லாச் சுமையாய்ச் சுமக்க மகிழ்ந்தேனே
நேரமில்லா இடமில்லா உறவில் தெளிந்தேனே.

உலகினில் மகிழ்ச்சி பெருகி நிறையட்டும்
இலகுவாய் மனங்கள் பறக்க முடியட்டும்
திலகமாய் சமத்துவம் மணம் பரப்பட்டும்
குலவழி முடிவிலாது நன்கு தொடரட்டும்.

பேறிது வேதனையில் பங்கிடும் அன்பு
ஆறிது எத்திக்கும் பாய்ந்திடும் நிலமதில்
வேறிது எங்கெங்கு மில்லையே நம்பு
சாறிது தித்திப்பாம் வாழ்வுப் பழமதில்!

பேதம் தனிமையும் வளர்ச்சியும் ஆம்
வேதம் வாழ்வும் மரபும் ஆம்
காதம் தூரமும் காலமும் ஆம்
நாதம் இசையும் உயிரும் ஆம்
பாதம் பணிவும் பயணமும் ஆம்
சாதம் உணவும் உழைப்பும் ஆம்
மாதம் வயதும் நிலவும் ஆம்
வாதம் சர்ச்சையும் உடலும் ஆம்
சீதம் தண்மையும் நிறைவும் ஆம்
மீதம் சூனியமும் இறைமையும் ஆம்
சேதம் மனமும் பொருளும் ஆம்
போதம் உள்ளும் இல்லும் ஆம்!

பேதம் தனித்துவம் காட்டவும், அதனால் ஏற்படும் வளர்ச்சிக்கும் ஆகும்.
மதங்கள் தரும் வேதம் வாழ்க்கை நடைமுறையாகவும், மரபாகவும் இருப்பதாகும்.
காதம் என்பது தூரமும், அதைச் சேரும் காலமும் ஆகும்.
நாதம் இசையும், உலகத்தின் உயிரானதும் ஆம்
பாதம் என்றால் பணிவும் தொடரும் பயணமும் ஆகும்
சாதம் என்றதும் நினைவுக்கு வருவது உணவும் அதற்கான உழைப்பும் ஆகும்
மாதம் என்றால் ஏறிடும் வயதும் நிலவின் சுழற்சியும் ஆகும்!
வாதம் என்பது வாக்கு வாதமும், உடல்நிலையும் ஆகும்.
சீதம் என்றால் குளிர்ச்சியும், மனநிறைவும் ஆகும்
எல்லாவற்றிலும் மீந்திருப்பது சூனியமும் இறைமையும் ஆகும்
சேதம் என்றால் முதலில் மனமும் அப்புறம் பொருளும் ஆகும்.
ஞானம் என்பது இருப்பதும், இல்லாதிருப்பதும் ஆகும்!

காணும் பொழுதிலே காணாமல் போவோமே
நாணும் விழிகளி னுள்.

காண்டாமிருகமும் யானையும் மானும் வண்டும்
வாண்டுக்குரங்கும் காட்டெருதும் கழுகும் ஆந்தையும்
தீ ண்டாப்பாம்பும் அறிநாியும் ஆட்சியில் சிம்மமும்
யாண்டும் உள்ளதாம் வனம்.

மொழியாளை செந்தமிழில் எமை வளர்த்த
இனியாளை தேன் தமிழில் சிந்திக்க வைத்த
தாயவளை சுதந்திரம் தனை தழுவ
உயிர் விட்ட பெரியோரை ஈன்ற
அற்புத பூமியிது நம் தாய் திருநாடு...

மண்ணாம் தாயின் மகிமை கண்டு
கண்ணாய் அவள் அழகைப் பேணி
பண்ணால் அவள் பாதம் போற்றி
விண்ணாய் நாமும் ஜொலித் திடுவோம்.

உன்னிடம் தானே என்னைத் தொலைத்தேன்
உன்னிடம் தானே வந்துநான் சேர்ந்ததும்
உன்னிடம் தானே என்னைக் கண்டேன்
உன்னிடம் என்னிடம் தனியில்லை கண்டேன்.

அமைதியிலா நெஞ்சமாய் ஆக்கிவிட்டு
இமைகளில் வசதியாய் அமர்ந்துவிட்டு
சுமையிலா அருஞ்சுவையாய் வந்தாயே
சமைந்து காலஞ்சிலையென மாறவே.

கொட்டுகிறதே அன்பு நற்பெரு மழையாய்
தட்டுகிறதே ஆசைக் கரங்கொண்டு மனக்கதவை
சொட்டுகிறதே பாசம் கொஞ்சமும் வழுக்காமல்
குட்டுகிறதே முன்வந்து சுயநலத் தலையை.

திகைக்கிறேன் உந்தங்கண் ணாமூச்சி கண்டு
புகைத்திரள் என்று விலகுமோ வென்று - நகைத்திடுங்
கண்வந்து கைப்பற்றிக் கவ்வையு நீக்கிட
விண்சென்று மீண்டேனே இன்று.

துன்புறுத்துவாயா என்றேன் - இல்லை என்றாய்,
உன் சிரிப்பில் வம்பு வந்து சேர்ந்ததடி.

இன்பமெப்போதுமா என்றேன் - ஆமாம் என்றாய்,
உன் கண்ணீரில் தேன்வந்து பாய்ந்ததடி.

இன்பமும் துன்பமும் இல்லாநிலை என்றேன்,
உன் அமைதியில் உயிர் கரைந்து நின்றதடி.